சுருக்கம்

மேல்நிலைக் கல்வி — அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டத்தைநடைமுறைப்படுத்துதல்—கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவித்தல் — ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (மேநிக2)துறை

அரசாணை (நிலை) எண். 187

நாள் 4. 10. 2006
படிக்கப்பட்டவை:-

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.78345/டபிள்யு 21/ 2006, நாள் 23.8.06.

---

ஆணை:-

1197 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டம் ஒப்பந்த அடிப்படையில் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டத்தை சீரிய முறையில் செயல்படுத்த பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் பணியிடம் வீதம் (Computer Instructor), அனைத்து அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. இம்முடிவிற்கேற்ப தற்போதுள்ள 1880 அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கும் பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் (Computer Instructor) பணியிடம் வீதம் ரூ.5500-175-9000 என்ற ஊதிய விகிதத்தில் 1880 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது. இப்பணியிடங்கள் அனைத்தும் தற்காலிக அடிப்படையில் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு நிரப்பப்படும் நாள் முதல் ஒரு வருட காலத்திற்கு அனுமதிக்கப்படுகிறது.

2. மேலே பத்தி 1-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் செலவினம் பின்க்காணும் கணக்குத் தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

<u>அரசு பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

2202-பொதுக் கல்வி-02-இடைநிலைக் கல்வி-109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- I திட்டத்தில் சேராதது AA . அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் - 01-சம்பளங்கள்.
(த.தொ.கு. 2202-02-109-AA-0103)

<u>நகராட்சி/ மாநகராட்சி பள்ளிகளுக்கான கணக்குத் தலைப்பு</u>

2202-பொதுக் கல்வி-02-இடைநிலைக் கல்வி-109 அரசு இடைநிலைப் பள்ளிகள்- I திட்டத்தில் சேராதது AB நகராட்சி/ மாநகராட்சி இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள்-01-சம்பளங்கள்
(த.தொ.கு.2202-02-109-AB-0106)

Scanned by CamScanner

3. இதற்கான செலவினம் ஒரு புதுப்பணி (New service) குறித்ததாகும். இதற்கு காலப்போக்கில் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாராச் செலவ நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.தி. பொ.l)த் துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன் பணம் பெறுவதற்கு நிதி (வ.செ.தி. பொ.l)த் துறைக்குத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். மேலும், துணை மானியம் மேற்கண்ட செலவினத்தைச் சேர்ப்பதற்கு ஏதுவாக உரிய கருத்துருவை தக்க சமயத்தில் நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 3768/FS/P/2006, நாள் 3.10.2006 –ல் அளிக்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். 666 (அறுநூற்று அறுபத்தி ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

மகுற்றாலிங்கம்
அரசு செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை–3.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்,
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை–79
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை–5 / 35

<u>நகல்</u>
நிதி (கல்வி)துறை, சென்னை–9
பள்ளிக் கல்வி ( வசெ) துறை,செ–9
மாண்புமிகு பள்ளிக் கல்வி த்துறை அமைச்சரின்
அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/10/0
பிரிவு அலுவலர்

Scanned by CamScanner